DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.18

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பாண்டியன் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 26th day of November, 2024.

முதல் விசாரணை

நான் வத்திராயிருப்பு தாலுகா, நல்லூர்பட்டியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கோட்டையூரில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடும் சேல்ஸ்மேனாக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 09.11.2021ம் தேதி எங்கள் பங்கிற்கு வந்த போலீஸார் ஆஜர் எதிரியின் புகைப்படத்தை காட்டி அவர் குறித்து கேட்டார்கள். ஆஜர் எதிரி தான் மாரிமுத்து. கடந்த 07.11.2021ம் தேதி மாலை 04.30 மணிக்கு மேல் ஆஜர் எதிரி எங்கள் பங்கிற்கு இருசக்கர வாகனத்தில் வந்து அவரது வாகனத்திற்கு பெட்ரோல் போட்டதை சொன்னேன். அவருடன் ஒருவர் வந்ததையும் சொன்னேன். புகைப்படத்தை காட்டியதில் ஆஜர் எதிரி மாரிமுத்து தான் புகைப்படத்தில் உள்ளவர் என்றும், அவர் எங்கள் பங்கிற்கு பெட்ரோல் போட வந்ததையும் சொன்னேன். மேலும் எதிரி மாரிமுத்து அவருடன் இருசக்கர வாகனத்தில் வந்த நபரை கொலை செய்ததாக கேள்விபட்டேன். இது

சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –</u>

எனது சொந்த ஊர் நல்லூர்பட்டி. நல்லூர்பட்டிக்கும், கோட்டையூருக்கும் இடையே சுமார் 4,5 கி.மீ தூரம் இருக்கும். எதிரி மாரிமுத்துவை எங்கள் பல்கில் பெட்ரோல் போட வருவதற்கு முன்பு எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஒருநாளைக்கு பல்கிற்கு 100 கணக்கில் நபர்கள் பெட்ரோல் போட வருவார்கள் என்றால் சரிதான். என்னுடைய கவனம் எல்லாம் பெட்ரோல் போடுவதிலும், மீட்டர் கணக்கு செய்வதிலும் தான் இருக்கும் என்றால் சரிதான், தெரிந்த நபர்கள் வந்தார் பார்ப்பேன். பெட்ரோல் போட வரும் நபர்கள் அதிகபட்சம் 1 முதல் 2 நிமிடம் வரை தான் இருப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அறிமுகம் இல்லாத நபர்களை என்னால் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது என்றால் சரிதான். யாரென்றே தெரியாத ஆஜர் எதிரியை போலீஸாரிடம் புகைப்படத்தை பார்த்து நான் இவர் தான் மாரிமுத்து என்று சொன்னதாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் பெட்ரோல் பல்கில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி பெட்ரோல் பல்கில் வேலை பார்க்கிறேன் என்பதை உரிமையாளரை விசாரித்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். அதுபோல் அந்த தேதியில் பெட்ரோல் பல்கில் யார் யார் வேலை செய்தார்கள் என்பதை அங்குள்ள ஆவணங்களை பார்த்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். நான் மேற்படி பெட்ரோல் பல்கில் வேலை செய்கிறேன் என்பதற்கு ஏதாவது ஆவணம் போலீஸாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் பெட்ரோல் பல்கின் உரிமையாளர் பெயர் தரணி. மேற்படி தரணியை விசாரித்தால் தான், நான் அன்றைய தினம் பெட்ரோல் பல்கில் வேலை பார்த்தேனா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் எதிரி மாரிமுத்துவின் பின்னால் அமர்ந்து வந்த நபரை,

எதிரி மாரிமுத்து அடித்து கொலை செய்துவிட்டதாக கேள்விபட்டதாக முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியம் போலீஸார் சொல்லிக்கொடுத்து சொன்னது என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் பொய் சாட்சியம் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.19

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மகேஷ்வரி | Caste | : |
| Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 26th day of November, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது வளையங்குளத்தில் எனது தாயாருடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவர். நான் அவரைவிட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறேன். கடந்த 07.11.2021ம் தேதி இரவு 09.00 மணிக்கு, நான் என் தாயார் வீட்டில் இருந்தபோது, என் கணவர் அங்கு வந்தார். என் கணவரிடம் சண்டையிட்டு கோபித்துக்கொண்டு என் தாயார் வீட்டில் இருந்தேன். என்னை தன்னுடன் சேர்ந்து வாழ வருமாறு எனது கணவர் ஆஜர் எதிரி அழைத்தார். அப்போது அவர் மீது ரத்தக்கவுச்சி வாடை அடித்தது. நான் ஏன் இவ்வாறு வாடை அடிக்கிறது என்று கேட்டதற்கு, ஆஜர் எதிரி சிக்கன் சமைத்து சாப்பிட்டு வந்ததாகவும், அதனால் வாடை அடிப்பதாகவும் சொன்னார். காலையில் ஊருக்கு போவோம் என்று சொன்னார். விடிந்தவுடன் காலை 07.00 மணிக்கு ஊருக்கு போவோமா என்று நான் கேட்டேன், ஊரிலிருந்து பெரியவர்களை அழைத்து வந்து என்னை கூட்டிச்செல்வதாக சொன்னார். மறுநாள் போலீஸார் ஆஜர்

எதிரியுடன் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். எனது கணவர் முதல் நாள் எங்கள் வீட்டில் கழற்றி போட்டுவிட்டுச்சென்ற ஆடையை எடுத்து போலீஸாரிடம் ஒப்படைத்தார். எதற்கு என்று நான் கேட்டேன், அதற்கு போலீஸார் செல்வகணேஷ் என்ற நபரை உன் கணவர் கொலை செய்திருப்பதாக சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

என் தாயார் வீட்டில் அம்மாச்சி, நான், தம்பி ஆகிய மூவரும் இருக்கிறோம். என் தம்பி ரேடியோ செட் வைத்திருக்கிறார். 07.11.2021 க்கு 10 நாட்களுக்கு முன்பிருந்து நாங்கள் இருவரும் பிரிந்து இருந்தோம். எங்கள் தாாயர் வீட்டிற்கு அருகே நெருக்கமாக வீடுகள் அமைந்துள்ளன என்றால் சரிதான். அது குடியிருப்பு வாசிகள் உள்ளனர் என்றால் சரிதான். 07.11.2021 ம் தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பு பிரிந்த நாங்கள் இருவரும் தற்போது வரை சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். என் கணவர் கடந்த 07.11.2021 ம் தேதி என் தாயார் வீட்டிற்கு வந்த விவரமும், போலீஸார் அதற்கு பின்பு வந்து விசாரித்த விவரமும், எங்கள் வீட்டிற்கு அருகாமையில் குடியிருப்பவர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். எங்கள் வீட்டிலிருந்து எடுத்தஉடைகளை போலீஸார் கைப்பற்றியதற்கு அத்தாட்சி தயார் செய்து என்னிடமோ, என் வீட்டில் உள்ளவர்களிடமோ, வீட்டின் அருகில் வசிப்பவர்களிடமோ கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அதற்கு காரணம் என் கணவர் எங்கள் வீட்டிற்கு வரவே இல்லை என்றும், உடைகளை வீட்டில் போட்டுச்செல்லவில்லை என்றாலும், போலீஸார் அதை கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. என் கணவர் என்னை பிரிந்து இருக்கும் கோபத்தை போலீஸார் பயன்படுத்தி பொய் சாட்சியம் அளிக்க வைக்கிறார்கள் என்றால் சரியல்ல. எனவே தான் அத்தாட்சியில் என் கையொப்பமோ, என் வீட்டார்கள் கையொப்பமோ இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 07.11.2021 ம்தேதி இரவு 09.00 மணிக்கு ஆஜர்

எதிரி என் தாயார் வீட்டிற்கு வரவில்லை என்றாலும், உடைகள் எதையும் கழட்டிப் போட்டுவிட்டு செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.